ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 2 | காஞ்சிபுரம் 23—1—44 சுபானு தை 10—ஞாயிறு | இதழ் 45.

★ இசை வழக்கு ★

[அ. முத்தையா எம். ஏ; உதவிப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி.]

தமிழரின்சிறப்புப், பழங்காலக்கதையாகவே இருந்துவ்ருகிறது. தமிழ் அரசர்கள் சிறப்புடன் அரசு நடத்திவந்த காலத்திலே தமிழரின் புகழும் தலைசிறந்து உலகெங்கும் பரவி இருந்தது. மொழி, கலை, இசை, சமூகம் எல்லாம் மிக உயர்ந்தநிலையில் விளங்கி வந்தன. தமிழர் பெரும் பொருள் படைத்தவர்களாக வாழ்ந்தனர். அயல் நாடுகளில் குடியேறினர். பலநாடுகளுடன் வாணிபம் நடத்தி வந்தனர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்"என்ற உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோளை உலகெங்கும் பரப்பினர்.

தமிழ்ச்சமூகமான மரத்திலே புல்லுருவி பாயத்தொடங்கியது. தமிழ்ச்சமூகமான தீம்பாலிலே ஆரிய நஞ்சு கலக்கத் தொடங்கியது. சமூகம் தாழத்தொடங்கியது. உயரிய வாழ்க்கை முறைகளும் அன்பின் உணர்ச்சியும் ஆரியச் சேர்க்கையால் அழிய ஆரம்பித்தன.

அந்த அழிவின் வேகம் அதிகமாதற்குத் தமிழரின் அரசுநிலை மாறியது துணையாக இருந்தது. தமிழ் அரசர்கள்—புகழ்பெற்ற மூவேந்தர்கள்—மறைந்தனர். ஆரியரின் செல்வாக்கும், சிறப்பும் ஓங்குவதற்குச் சாதகமாகத் தெலுங்கர் ஆட்சி தென்னாட்டில் பரவியது. தமிழரின் நடுநிலைக்களமான பகுதிகளிலும் முதலில் விசயநகரின் ஆட்சியும் பின் மகாராட்டிரர் ஆட்சியும் நிலவி இருந்தன. அதன்பின் ஆங்கிலேயரின் ஆட்சி பரவிவிட்டது.

தமிழ் அரசர்களின் காலத்திலேயே ஆரிய நச்சுமரவிதை முளைக்கத்தொடங்கியது. தமிழ் அரசு அழிந்தபின் அம்மரம் தழைத்துப்,பூத்துக், காய்த்து,நச்சுப்பழங்களைத் தமிழ்ச்சமூகம் உண்டுகளிக்கஉதவி வந்தது! இன்னும் உதவுகிறது. அது நச்சுக்கனியேயாயினும், தோற்றத்தில் பகட்டாக இருப்பதாலும், சுவைமிக்கதென அதை நுகர்வோர் எண்ணும்படி இருப்பதாலும், அதனை உண்டோர் மதிமயங்கி, தன்வயமிழந்து, தன் மதிப்பை இழந்து, செயலற்று, அதையன்றி இன்பம் தருவதுவேறொன்றுமில்லை என்றுகூறி அதன் மயமாகிவிட்டனர். இக்கூட்டத்தினரின் எண் நாளடைவில் பெருகவே அந்நஞ்சின்வேகம்அதிகமாகித், தமிழரின் சமூகம் மொழி, கலை, செல்வாக்கு முதலியவை சிறிது சிறிதாக என்புருக்கிநோய் கொண்டாரைப்போல அழிந்துவந்துள்ளன.

இந்த நச்சுநோயின் வேகம் அதிகமாக இருந்தசமயத்தில், ஆங்கில ஆட்சி, செல்வாக்கு, மொழி, வாணிபம், வாழ்க்கை முறை இவை நம் நாட்டிற்குள் நுழைந்து தமிழ்ச் சமூகம் புதியதொரு நோயாலும் வருந்தும்படி செய்துவிட்டன. ஆங்கிலத்தின் பலவகைச்செல்வாக்கு, தமிழ், தமிழரின் சமூகம் முதலியவை மீண்டும்இழந்த சக்தியைப்பெறவொட்டாது தடுத்து வந்தது.

எவ்வளவு அறிவிலியாயிருப்பினும், நோய்முற்றிய பிறகாவது, நோய்வாய்ப் பட்டிருப்பதை உணராமல் இருக்க முடியாதல்லவா? நம்மிற்சில பெரியார்கள் நோய்நிலை கண்டு, நோய்மூலம்அறிந்து, நோயை ஒழிக்கக்கூடிய மருந்தைக் கொடுக்க முன்வந்தார்கள். பலநோய்கள் நம்மைப் பீடித்திருப்பதைப் பல சிறப்பு முறையில் தேர்ந்த மருத்துவப் பெரியார்கள் கண்டு, ஒவ்வொரு நோய்க்கும் தக்க மருந்து கொடுக்கிறார்கள். அந்த மருந்துகளை உட்கொண்டு, தக்க பத்தியமுறைகளைக்கைக்கொண்டாலொழிய நம்பிணிகள்ஒழிந்து தீரர்களாய், அறிஞர்களாய்ப், புகழுடையோர்களாக வாழமுடியாது.

தமிழ்மொழியாகிய உடலைவாட்டிவந்த வடமொழிக்கலப்பு நோய்க்கு மருந்தளிக்கத்தொடங்கி, அந்தநோயைப் பெரிதும் ஒழித்துவந்த, வருகிற மருத்துவப் பெரியார் தமிழ்ப்பெரும் புலவர்—அறிவிற்பெரியார்—உயர்திரு மறைமலை அடிகளார். அப்பெரியாருடைய மருந்தைஉட்கொள்ளத்தொடங்கிவிட்டபடியால் அந்த நோய் ஒழிந்துவருகிறதென்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது. தனித்தமிழ் இயக்கம், தமிழ் உணர்ச்சி இயக்கம் முதலியவை நம் நாட்டில் உரம்பெற்று வருகின்றன.

தமிழ்ச்சமுகநோய்க்கு மருந்தளிக்க வந்துள்ள மருத்துவரே நம்மதிப்பிற்குரிய இராமசாமிப் பெரியார். தமிழ்ச் சமுகத்தைச் செயலற்றதாக்கி வைத்த திமிர்வாதமான வைதிகநோயை வேருடன்களைய "தன்மதிப்பு" இயக்கமாகியஉயர்ந்தமருந்தைஅன்புடன் ஊட்டிவரும் பெரும்பணியைச்செய்துவருபவர் அப்பெரியார். அம்மருந்தின்சிறப்பை அறியாது, அதை உட்கொள்ளமறுப்பவரும், அஞ்சுபவரும், இன்றும் நம்மிடைப் பலர் இருப்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது.

நமக்கு மனக்கிளர்ச்சி உண்டாகாதவாறு நம்இசை உணர்ச்சியை உண்டுவந்த பிறமொழிஇசையாகிய நோயைக்கண்டு, திடுக்கிட்டு, வருந்தி, அந்நோய்வேதனையையொழிக்க மருந்தளிக்க முன்வந்துள்ள பெரியார், தமிழ்நாட்டுப் பெருவள்ளல் செட்டிநாட்டு அரசர். சர். அண்ணாமலைச்செட்டியார் என்பதை தமிழ் உலகம்கண்டு பாராட்டத்தொடங்கிஇருப்பது தமிழரின் எதிர்கால இன்பவாழ்க்கைக்கு அறிகுறியாகஇருக்கிறது.

இப்பெரியார் இம்மருந்தைத் தம்உற்றார் உறவினருக்குக் கொடுக்கத்தொடங்கியதும், "நீர்ஏனையா இந்த மருந்துகொடுக்கிறீர்? இதைக்கொடுத்தால் இறந்துபோகவேண்டியவர்கள் "கலைஅழிவு" என்ற இடுகாட்டைநோக்கி மகிழ்வுடன் சென்று மடிபவர்கள்-உயிர்பெற்றுவாழத் தொடங்கிவிடுவார்களே!" என்று, நம்மிடையே வாழ்பவர்கள்—நம்முன்னேற்றத்தை விரும்பாதவர்கள்—பெருவழக்குத்தொடங்கிவிட்டார்கள். இதையே "இசைவழக்கு" என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

தமிழ் இசை, உணர்ச்சியின்தேவை, சிறப்பு முதலியவைகளைச் செட்டிநாட்டரசர் அவர்களும், பல அறிஞர்களும், எடுத்துக்காட்டி வருகிறார்கள். ஆதலால் அவ்விவரங்களை இங்குதருவது மிகையாகும். இங்கு தமிழ்இசை இயக்கத்தை

(2ம் பக்கம் பார்க்க)

இசை வழக்கு.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்போரின் உட்கருத்தை மாத்திரம் குறிப்பிடவிரும்புகிறேன்:—

சுமார் இருபது ஆண்டுகளாகத் தமிழர் இயக்கம் சிறப்பாக அரசியல் இயக்கமாகவே இருந்துவந்தது. தமிழரின்இயக்க அரசியல் பகுதிமட்டுமே தமிழ்த்தலைவர்களால் வளர்க்கப்பட்டது. அதுகூடஇப்போது பல தலைவர்களால் கைநழுவவிடப்பட்டிருக்கிறது. தமிழர் இயக்கம் அரசியல் இயக்கமாகமட்டும் இருந்தபோது எதிரிகள் அதை எதிர்ப்பது எளிதாகஇருந்தது. ஆரிய நாகரிகப்பரத்தையின் இன்பத்தையே நுகர்ந்து, தம்இல்லக்கிழத்தியையும் ஏனையநலன்களையும் மறந்திருந்த, தமிழனுக்குத் தமிழர் அரசியல் இயக்கமாகிய உற்றதோழன், தமிழன் கடமையை உணர்த்திவந்தான். அதன்பயனாகத் தமிழன் தன்இன்பஇல்லத்திற்குத் திரும்பிவந்தபோது, வழியில் "தேசியப்" பெயர்கொண்ட "மோகினி"யை அனுப்பித் தன்வீட்டிற்குவந்துசேராது வேறு களியாட்டிடங்கட்கும் போய்ச்சேரும் படிசெய்துவிட்டனர்சங்ககாலத்திலிருந்தே நம்முடன்இருந்து 'சேவை' செய்யும் ஒருகுறித்தசமூகத்தைச் சேர்ந்த "பாங்கர்கள்". எனவே, தமிழ்ச் சமூகமாகியதலைவி அத்தமிழனிடம் "மொழி உணர்ச்சி" "கலைஉணர்ச்சி" முதலிய தோழிகளை அனுப்பவேண்டிநேரிட்டுவிட்டது. தமிழ்த்தலைவியின் நன்மையையும், இன்பத்தையும்பெரிதும்விரும்புவோராகியதோழிகள், அத்தமிழனை அவன் இல்லத்தில்கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால், தங்கள் பிழைப்புக் கெட்டுவிடுமேஎன்று, "ஆரியப் பரத்தையையும்" "தேசிய மோகினியையும்" தம் வாழ்க்கைக்கானவருமானத்திற்காகப் பயன்படுத்தும், "பாங்கர்கள்" தமிழ்த்தலைவன் மனதைக்கலைப்பதென்பது இயல்பானதொருகாரியந்தானே. இப்பாங்கன் செய்கையைக்கண்டு நாம்வியப்படையவேண்டுவதில்லை. அவன் வலையில் விழாது, மறுமுறையும் சிக்குண்டுவருந்தாது, கருத்துடன் வீடுவந்து விரைவில் சேரவேண்டுவதே தமிழன்கடன். தமிழன் தன் இன்ப இல்லுக்குத் திரும்பிவந்துசேர்ந்தால் தலைவனை உண்மையாகக் காதலிக்கும்தலைவி, "கண்ணை இமைகாப்பதுபோல்" காப்பாள்; பூவின் மணம்போல உடன்கலந்திருப்பாள்: உண்மைக்காதலைப் பொழிவாள்: இன்பக்கடலில்திளைத்து மகிழச்செய்வாள்.

தமிழ்த்தலைவியின் பல நலன்களாகிய, "இசை" கலை, மொழி, நாகரிகம், குறிக்கோள்முதலிய பலவகைப்பட்ட இன்பங்களையும் தமிழ்த்தலைவன் நுகர்ந்து "என்னாளும் இன்பமே! துன்பமில்லை" என்ற உணர்ச்சியுடன் இனிதுவாழலாம்.

T. K. S. சகோதரர்களின்

ஔவையார்

பாடல் வசனங்களுடன் 200 பக்கம்கொண்ட புத்தகம்

விலை ரூபா 1-8-0.

(தபால் செலவுதனி)

கிடைக்குமிடம்:—M. S. B. S. சபா, ஈரோடு.

டில்லி தேசியப்போர்முன்னணி

பெண்கள் அமைப்பாளர்.

பேகம்ஷா நவாஸ்

வாழ்க்கைச் சரித்திரச்சுருக்கம்.

ஸ்ரீமதி ஜஹானரா அல்லது பேகம் ஷாநவாஸ் என்னும் இவ்வம்மையார் லாஹூருக்கு அண்மையிலுள்ள பகவல்பூர் என்ற எழில்மிகுந்த கிராமத்தில் 1896-ஆம் ஆண்டில் ஜனனமானார். வைசிராய் நிர்வாக சபையில் மூன்று இலாகாக்களை நிர்வகித்த திறமையாளரும், மாண்டேகு சீர்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்தபொழுது பாஞ்சாலத்தின் பிரதம மந்திரியாக ஆட்சிபுரிந்தவரும், முஸ்லீம் லீக் ஸ்தாபகரில் ஒருவருமான ஸர். மியான் முஹம்மத்ஷபீ (மர்ஹூம்) அவர்கள்தான் ஸ்ரீமதி ஜஹானரா அவர்களின் அருமைத்தந்தையார்.

பர்தாவிலேயே ஜனித்துப் பர்தாவிலேயே வளர்ந்த இவ்வனிதையின் பெயர் உலகம் விலைமதிக்க வொண்ணாத சில நிதிகள் அவருக்காகப்பத்திரமாகஏற்படுத்தப்பட்டிருந்ததாக அவ்வம்மையாரின் பெற்றோர்கள் கனவிலும் கருதிஇருக்கமாட்டார்கள்.

இளம்வயதிலேயே நல்லஅறிவுள்ள மங்கையாகத்திகழ்ந்த ஸ்ரீமதி ஜஹானரா அவர்கள் லாஹூர் குயின் மேரீஸ் கல்லூரியில் கல்விகற்று வந்தார். அதுசமயம் தமதுகுடும்ப வழக்கப்படி கோஷா முறையை அனுஷ்டித்தேதான் கல்லூரிக்குச் சென்றுவருவது வழக்கம். மாதர் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான இப்பர்தா வழக்கத்தின் குணதோஷங்களைப்பற்றி அக்காலத்தில் சிறுமியாகவிருந்தஸ்ரீமதிஜஹானரா அறிந்துகொண்டிலள்.

1911-வது ஆண்டில் இவ்வம்மையாருக்கு நிக்கா (திருமணம்) நடைபெற்றது. பாஞ்சாலத்தில் பிரபல வழக்கறிஞரான ஜனாப்மியான்ஷா நவாஸ்கான் வாழ்க்கைத் துணைவர். தமது அருமைக்குமாரத்திக்குத் தக்கதோர் கணவன் வாய்த்தமை குறித்து ஜஹானராவின் பெற்றோர்கள் மிக மிக இறும்பூதெய்தினர். மணமக்கள் இல்வாழ்க்கை நனிசிறப்ப நடைபெற்று வந்தது. பரந்தநோக்கும்,

8-பக்கம் பார்க்க.

விளம்பரம்.

அகடவிகட கோர்ட்டு விசாரணை 0-12-0.

தொண்டைமான் சரித்திரம் 0-12-0.

இரண்டு புத்தகங்களுக்கும் ஆர்டர்கொடுப்பவர்களுக்கு தபால்சார்ஜ் இனம்.

கிடைக்குமிடம்:—

யுனைடெட் பிரஸ்,

97, ஆடிசன்பேட்டை,

காஞ்சிபுரம்.

மதிவிலக்குச்சட்டரத்து!

பாரதன்.

"உங்களுடைய மார்க்கங்கள், சமுதாய அமைப்புகள் ஆகியவைகளிலே, நாங்கள் தலையிடுவதில்லை என்றுஉறுதி கூறுகிறேம்''என்றவாக்குறுதிகோடுத்துவிட்டுப் பிரிட்டிஷார் இந்தியாவை ஆளத்தொடங்கினர்கள்' இதன்பொருள், பெயருக்கு ஆங்கில ஆட்சி இருக்குமேயொழிய, உண்மையிலே, மனுதர்மஆட்சிதான் நடக்கும், என்ற உறுதிமொழியை ஆரியருக்கு ஆங்கிலேயர் அளித்தனர், என்பதேயாகும், இங்கு இன்றுவரையிலே, உண்மையான பிரிட்டிஷ் ஆட்சி நடப்பதானல் இங்கிலாந்திலே உள்ளது போன்ற ஆட்சியல்லவா நடைபெற்றிருக்கவேண்டும். பிரிட்டிஷாரிலே, பறையர், பார்ப்பனர் உண்டா!—நொய்யலாற்றங்கரையிலே, சென்றகிழமை, திருப்பூர் திராவிடர் கழகத்தினர் ஏற்பாடுசெய்த பொதுக்கூட்டத்திலே நமது தலைவர், பெரியார் இராமசாமி அவர்கள், மேலே பொறித்துள்ளபடி பேசினர்.

கருத்துள்ளோர், எவருக்கும், இச்சொல், சிந்தனைக்குத்தக்கதோர் வேலைதரக்கூடியது. ஆள்பவர் பிரிட்டிஷார்! அகிலவுலகிலும் புகழ்பெற்று, அலைகடலைஅடக்கி ஆண்டு, அதிநுட்பமானவியாபாரத் திறம்பெற்றுள்ள பிரிட்டிஷார் என்பது மட்டுமல்ல, அவர்களுக்குத் தகுதியான அடைமொழிகள்! நாகரிக ஆட்சியை நடத்தவல்லவர்கள், மனிதநீதியை நிலைநாட்டுபவர்கள், கெடாததுலாக்கோல் கொண்ட துரைத்தனத்தார், கேடுகளையவும் நாடு சிறக்கவும் பாடுபடும் பண்பினர், என்ற பலபல அடைமொழிகளை, அந்நாட்டுஇலக்கியகர்த்தாக்கள், பிரிட்டிஷாருக்கு ஆரமாக்கித்தந்துள்ளனர். நாகரீகம், மனிதாபிமானம், நீதி, எனும், பண்புகளின்படி, ஆட்சிநடக்கிறதா என்பதைஅறிய, சர்க்காரின் சாசனங்களும் தாசர்களின் ஏடுகளும், சரியான அளவுகோலாகா! சமுதாயத்தின்நிலையை, அறிவெனும் அளவுகோல்கொண்டு அளந்து பார்த்தால், பண்டையநாட்களைவிட, இன்று சமுதாயத்திலே பேதம் ஒழிந்து பற்றுமிகுந்து, வேற்றுமைகள்மாய்ந்து ஒற்றுமைமிளிர்ந்து, தன்மதிப்பைத் தீய்ப்போர் சாய்ந்து விடுதலை உணர்வுமே மேலோங்கி இருக்கிறது என்பது தெளிவாகத்தெரியவேண்டும். அப்போதுதான், நாகரிகமும் மனிதாபிமானமும் ஆட்சியாளர்களுக்கு உண்மையிலே அடைமொழிகளேஎன்றுகூற இடமுண்டு! பெரியார், கேட்பதுபோல, பிரிட்டிஷாரிலே, பார்ப்பனர் என்ற ஒரு வகுப்பும், பறையர்என்ற பழிச்சொல்லைத்தாங்கும்வகுப்பும், இருக்கிறதா, இருக்கமுடியுமா, இருந்திருப்பின் இங்கிலாந்து ஒரு வல்லரசாகி இருக்கமுடியுமா என்றுகேட்கிறோம். ஒருநாடு முன்னேற, அதன்புகழ் பரவ, உலகிலே அதற்கு உன்னதமான இடம் இருக்க, அந்நாட்டு மக்களிடையே மாண்புகள் மலரச், சமுதாயம், எவ்விதமாக இருக்கவேண்டும், என்பதை உணரமுடியாத அறிவிலிகளின் ஆட்சியிலே, இந்தியாசிக்கிவிட்டிருந்தால், இது நியாயமா? இது முறையா? என்று கேட்க மனம்துடித்தாலும் நாவெழாது. ஆட்சியாளரோ அறிவிலிகள், அவரிடம் நாம் எங்ஙனம் நாகரிகத்தையோ, நற்பண்புகளையோ எதிர்பார்க்கமுடியும், சிறுத்தை சிந்துபாடுமா, சேவல்முட்டையிடுமா, என்றுகருதி, எவரும், பேசிப்பயனில்லை என்றிருந்திடக்கூடும். நாயாளும் நாட்டிலே, குலைப்புத்தான் சட்டமாக இருக்கும், கடிப்பதுதான் பரிசாகக் கிடைக்கும். கழுதை ஆளத்தொடங்கிவிட்டால், உதைகிடைக்காதுபோகுமா! அதுபோல, சமுதாயஅமைப்பு முறையைச் சித்ரரிக்கத்தெரியாதவர்கள், மதக்கிறுக்கரின் மமதையை மட்டந்தட்டும் மார்க்கமறியாதவர்கள், பேதத்தை ஒழித்திடும் போக்கறியாதவர்கள், ஆள்கின்றனர், என்று பிரிட்டிஷார் விஷயமாகக் கூறிடமுடியாது. அந்த நாட்டிலேஉள்ள சமுதாய அமைப்பும், அறிவுத்தெளிவும், மார்க்கமாண்பும், ஒற்றுமை எழிலும், யாவரும் அறிந்ததே! எங்கெங்கோ இருந்து இடம்தேடிவந்த பல கூட்டத்தினர், ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு என்பதை உணர்ந்து, பன்னெடும் நூற்றூண்டுகட்கு முன்னலேயே, பேதம் ஒழித்துப் பெருநெறிபிடித்துச், சமுதாயச் சழுக்கரைச் சாய்த்து மதஅழுக்கைப் போக்கிப், பிளக்கமுடியாத பிரிட்டிஷார், என்ற இனமாயினர். சமுதாயத்தைத் திருத்தமட்டுமல்ல, களைஎடுக்கமட்டுமல்ல, ஒற்றுமை எனும் நற்பண்புகொண்டு நாடோடிகளையும் நல்லதோர் இனமாக்கி நானிலத்திலே நிலைபெறச்செய்யும் ஆற்றலைச் செயலிலே காட்டினர் பிரிட்டிஷார். அவர்கள் அறியார்களா, இங்குள்ள ஜாதி ஆணவத்துக்குக் காரணமே, பேதமூட்டும் இந்துமார்க்கமும்அதைப்பிடித்தபடிவைதீகபீடத்திலிருந்து கொண்டு வெறியாட்சிநடத்தும் பிறவிமதக்கிறுக்கர்களான ஆரியர்களுமேயாவர் என்ற உண்மையை? நாற்பதுகோடி என்ற எண்ணிக்கை, எவ்வளவு பேதங்கள், சூதுகள், சுயநலங்கள் மனஇருள்கள் கொண்ட ஒரு சந்தைக்கூட்டத்தின் தலையை எண்ணிப்பார்த்துக் கூறிய தொகையேதவிர, நாட்டினர் நாற்பதுகோடி, என்றால், நாற்பதுகோடி உடலம் ஒரேஉள்ளம், என்ற உயரிய இலட்சியத்தின் இருப்பிடமாக இந்தியா இல்லை என்பதை அவர்கள் அறியார்களா? ஒருவனை ஒருவன் தாழ்ந்தவன்என்றும், இழிபிறப்பென்றும், ஒரு கூட்டம் மற்றோர் கூட்டத்திற்கு அடிமை வேலை செய்ய ஆண்டவனால் படைப்பிக்கப்பட்டதென்றும், ஒருகூட்டம் மற்றொருகூட்டத்தின் பாதந்தாங்கியாக இருப்பதாலேயே பரலோகத்திலே இடம்பெறுமென்றும், பாடுபடுபவன் பஞ்சகச்சக்காரனுக்குப் பாலும் பருப்பும் பாதகாணிக்கையும் பிறவும் ஈந்துவாழ்வதே மதமென்று, இங்கு இருப்பதும் ஆங்கிலருக்குத்தெரியும். இவ்விதச் சமுதாயஅமைப்பு ஒழிக்கப்பட்டு, புதிதாகச் சமைக்கப்பட்டாலன்றி, புலிப்பாலூட்டிக் கொம்புள்ள குதிரைதாலாட்டிவளர்ப்பினும் ஒற்றுமை வாழாது என்பதும் தெரியும். அடிக்கடி இந்தியாவின் குறைபாடுகள்பற்றியும், சுயாட்சிக்குள்ள தடைகள்பற்றியும் பேசும் பிரிட்டிஷ் பிரமுகர்கள், இவைபற்றிக்கூறுமல் இருப்பதில்லை. தெரிந்துமிருக்கிறார்கள் தெரிவித்தும் வருகிறார்கள், ஆனல் திருத்த மறுக்கிறார்கள்! காரணம் என்ன? இந்தக் காரணத்தைத்தான் அன்று பெரியார் விளக்கினர்கள். ஆங்கில ஆட்சி ஏற்பட்டபோதே, இங்கிருந்த ஆரியக்கிளர்ச்சி, உங்கள்மத, சமுதாய அமைப்புகளிலே நாங்கள் தலையிடுவதில்லை. என்ற உறுதிமொழி கொடுத்துவிட்டுக் கோல்கொள்ளவேண்டிய நிலைமையைப் பிரிட்டிஷாருக்கு ஏற்படுத்தியது. அந்தக் காலம், திராவிடம் இளைத்து, பாகிஸ்தான் பலமிழந்து, நாடு காட்டரசரிடம் சிக்கி நலிவுற்றநேரம். ஆரியப்பண்டிதர்களின் சிந்தனைகள் அரசஅவைகளை அரித்தகாலம்! ஆட்சிபுரியவந்த ஆங்கிலருக்கு, ஆரியரின் ஆர்ப்பரிப்புக்குஇணங்கி மதசமுதாயஅமைப்பை மாற்றமாட்டோம் என்றஉறுதி கூறித்தீரவேண்டிய நிலைமை உண்டாயிற்று. அதனலேயே, ஆட்சி ஆங்கிலருக்கும், அதன் மாட்சிமை ஆரியருக்கும், வீழ்ச்சி, நாட்டுக்குடையோருக்கும் ஏற்பட்டது.

வேதபுராண இதிகாசாதிகளைக்கொண்டும், சடங்கு சம்பிரதாயங்களைக் கொண்டும், பல நூற்றூண்டுகளாக, தன்னலத்துறையிலே நுண்ணறிவாளரான ஆரியர், இங்கு,ஓர்விதமதசமுதாயமுறையைஏற்படுத்திவைத்திருந்தனர்.ஆரியமதஅமைப்பு, மக்களைப்படித்த மூடராகவும், அறிந்தும் ஆரியக்குழியிலே வீழ்பவராகவும், செய்தது. சமுதாய முறையோவெனில் பாடுபட்டவன்கெடவும், பழியால்இடிபடவும், இழிநிலையால் இடர்ப்படவும், ஆட்டிப்படைப்பவன் அறுசுவை உண்டிபெற்று, அரையில் பீதாம்பரம் அணிந்து, ஆசான் என்ற பட்டம்பெற்று இன்புறவும், வழிசெய்து வைத்தது. களம்பல வற்றிலே,

(4-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி 23—1—44 ஞாயிறு

வெற்றிக்கு அறிகுறி.

அமரிக்கத்தலைவர் ரூஸ்வெல்ட், யுத்தச் செலவுக்காகப் பத்துக்கோடி டாலர்கள் ஒதுக்கிவைக்கப்படும் என்ற திட்டத்தைக் கொண்டுவந்து, "திட்டமான நடவடிக்கைஎடுக்கும் கட்டத்திற்கு வந்துவிட்டோம்" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த யுத்தம் 1945-வது ஆண்டுவரை நீடிக்கும் என்று எதிர்பார்த்தே இந்த வரவுசெலவுத் திட்டத்தைக்கொண்டு வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யுத்தம் சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வராதா என்றகவலையே இப்போது எல்லாருக்கும்உண்டாகியிருக்கிறது. இந்த யுத்தத்தினுல் மக்களின் வாழ்க்கைமுறைகள்எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டன. வாழ்க்கையின் முக்கிய பொருள்களான உணவு, உடை ஆகிய இரண்டுக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடி, யுத்தத்தின்முடிவை விரைவில் காண வேண்டுமென்ற கவலையை மக்களுக்கு உண்டாக்கிவிட்டது. இந்த நிலையில், யுத்தம் 1945-வரை நீடிக்கும் என்றசெய்தி, மக்களுக்கு இன்னும் அதிககவலையை உண்டாக்ககூடியதாகவே இருக்கும் என்பதை நாம்அறிவோம்.

ஆனுல், இந்தயுத்தம் உலகயுத்தம் என்பதையும், உலகமக்கள் அனைவருடைய கவனத்தையும் இந்தயுத்தம் இழுத்திருக்கிறதென்பதையும் உணரும்போது, யுத்தம் நீடிப்பதில்யாரையம் குறைகூறமுடியாது. எதிர்கால உலகசமாதானத்திற்கும் சுதந்திரத்திற்கும் வழிகோலக்கூடிய முறையிலே இந்தயுத்தம் நடைபெறுகிறது. அடிமை ஆட்சியில் அகப்பட்டுத் தவித்துக்கொண்டிருந்த ஒவ்வொரு நாடும், இந்தயுத்தத்தினுல்சுதந்திரஉணர்ச்சியைப் பெற்றுவிட்டன. ஒருவரை ஒருவர் அடக்கிஆளும் கொடுமையினுல் ஏற்படும் தொல்லைகளுக்கு இந்தயுத்தம் நல்ல பாடம் கற்பித்துவிட்டது. மக்களின் சுதந்தரத்திற்காகவே இந்தயுத்தம் நடக்கிறதென்று, போலாநடத்துபவர்கள் உணரவும், அதைவெளியில் உரைக்கவுமான நிலைமையை உண்மையிலேயே இந்தயுத்தம் உண்டாக்கிவிட்டது.

எனவே, இந்தயுத்தம் காலஎல்லையை மீறியதாகவும், கனத்ததொல்லைகளைத் தருவதாகவும் இருந்தபோதிலும், இதன் முடிவு உலக சமாதானத்தையும் சுதந்தரத்தையும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கையுடையோருக்கு இக்கஷ்டங்கள் பெரிதாகத் தோன்ரு.

தனக்கிருக்கும் நாடு போதாதென்று இன்னும் பல நாடுகளைத் தனதாக்கிக்கொள்ள வேண்டுமென்ற பேராசையின் பாற்பட்ட ஜர்மன், ஜப்பான் முதலிய நாடுகள், வாலைச்சுருட்டி மடக்கி மூலையில் ஒதுங்கக்கூடிய நிலைமையையே ரூஸ்வெல்டின் திட்டம் உண்டாக்கி யிருக்கிறதென்று நாம் கருதுகிரும். எதிரிகளைக் கடலிலும் ஆகாயத்திலும் தரையிலும் எதிர்த்து முறியடிக்கக் கூடிய போதுமான யுத்ததளவாடங்கள் தயாராய் இருக்கின்றன வென்று ரூஸ்வெல்ட் கூறியிருப்பதும், ரஷ்ய மக்களின் அபரிமிதமான முன்னேற்றமும் வெற்றிக்கும் உலகசமாதானத்திற்கும் அறிகுறியாகவே இருக்கின்றனவென்று சொல்லவேண்டும். அதோடு, செல்வம் கொளிக்கும் நாடுகளான பர்மா, சிங்கப்பூர் முதலான நாடுகளைத் தம்வசப்படுத்திக்கொண்ட ஜப்பானியர், இந்த யுத்தத்தைச் சமாளிக்கமுடியாத நிலைமைக்கு வந்துவிட்டனர் என்பது, அவர்கள் நாட்டில் ஏற்படுத்தும்வரி உயர்வால் நன்கு தெளிவாகி விட்டது. யுத்தத்தினுல் ஏற்படும் செலவைச் சமாளிக்க முடியாமல், இவ்வாண்டில் 220 கோடி என் அதாவது 138 கோடி பவுன் வரக்கூடிய அதிகவரி போட்டிருக்கிருர்களாம். உண்மையிலே, இவையனைத்தும் நேசநாட்டினரின் வெற்றிக்கும், உலக சமாதான சுதந்திரத்திற்கும் வழிகோலியதாகவே கருதப்படும்.

மதிலிலக்குச்சட்ட ரத்து!

3-ம் பக்கத் தொடர்ச்சி.

வீரர் பல கோடியினரைப் பலிகொடுத்து, ஒரு இனம், ஒரு நாட்டை வென்ருல், வென்றபிறகு தன்ஆதிக்கத்தை அங்கு புகுத்தும். ஆதிக்கத்தைப்புகுத்திற்று என்ருல் அதன்பொருள், வென்ற வீரர்களின் சொற்படி அந்தநாட்டினர் நடக்கின்றனர், கேட்டவரியைக் கொட்டுகின்றனர், தீட்டியவழி நடக்கின்றனர், சாட்டை அடிக்கு முதுகைக்காட்டுகின்றனர், என்பதுதானே! இந்தஆதிக்கத்தை, இரத்தம் சிந்தி, போர்ப்புலிகள் பெற்றனர். ஆரியரோ தமதுசிலந்தி இயல்புடைய சிந்தனையைச்சிந்திப், பெற்றனர். ஆரியரின் மொழியே, மற்றையோருக்கு, இகம்பரம் இரண்டினுக்கும் இங்கு வழியாகக்கருதப்படுவதை எவர்மறுக்க முடியும்! போர்ப்புலி ஆளத்தொடங்கினுல், சட்டம் தொகுப்பான். ஆரியர்தொகுத்தது வேதபுராணுதிகள். சட்டத்தை மீறுபவனுக்குத் தண்டனை இகத்திலே, மட்டுமே உண்டு, வேதபுராண திட்டத்தை மீறுபவனுக்கோ, பரத்திலே பலபல தண்டனைகளாம்! சட்டங்கள், பொதுஅறிவு வளர வளர, மாறும், மாற்றப்படும், மாற்ற வேண்டுமென்ற கிளர்ச்சியும் மதிக்கப்படும், அனுமதிக்கப்படும், ஆரிய திட்டமோ, அன்றுபோல் இன்று இருக்கிறது, மாறவில்லை, மாற்றவேண்டும் என்ற மனப்பான்மை தோன்றுவதில்லை, தோன்றினுலும் துவைத்து மிதித்துவிட ஆரியபோதையாளர்ஏராளம். ஆரியராகப், பார்த்து எக்காரணம் கொண்டோ, ஏதாவது சில மாற்றங்கள் செய்திருப்பர். "மாற்று" என்றுகூற, மக்கள்முன்வரார்! ஆம்! அது மகேஸ்வரனுக்கே அபசாரம் அல்லவா! ஒரு வல்லரசுவிதிக்கும், வரி, வஜாசெய்வதுண்டு; மக்கள் தாங்கமுடியாத நிலையில் ரத்தாவதுண்டு, இல்லாததாலோ என்தர வேண்டும் என்ற எண்ணம் எழுவதாலோ, வரியைத்தரமுடியாது என்று கூறும் மக்கள் உண்டு! ஆரியர் வகுத்து வைத்துக்கொண்ட வரிமுறையோ, தானம், என்ற பெயருடையது. தரித்திரனுலும், தாய்க்குத் தேவையானதையோகுழந்தைக்குத்தேவையானதையோ நிறுத்தியாவது ஆரியருக்குத் தந்தாகவேண்டும், தராவிட்டால், இங்கு, ஜாதிகெட்டவனுவதுடன், நரகத்திலே வேறுஉழல வேண்டுமாம்!! ஆக, போர் செய்து பட்டங்கொண்டவனின் ஆதிக்கத்தைவிட; மக்களின் மதியைப்பாழ் செய்து பரிபாலனத்தைப்பிடித்த ஆரியரின் ஆதிக்கம், வலிவுடையதாக இருக்கிறது. இதைநன்கு உணர்ந்தே, ஆங்கில ஆட்சி எற்பட்டபோது, ஆரியர், யாரோ ஆண்டுகொண்டு போகட்டும் நமக்கோர் கேடுமில்லை, நாட்டிலே, நமது ஆதிக்கம் நிரந்தரமாக இருக்க நாம் அமைத்துக் காத்துவரும் மதசமுதாய அமைப்புமுறை இருக்கட்டும், நமது வாழ்வுக்கு வளமுண்டு, எனவே ஆளவரும் ஆங்கிலரிடம், இங்குள்ள மதசமுதாய அமைப்பு முறையை மாற்றுவதில்லை, அதிலேதலையிடுவதில்லை என்று உறுதிகூற வைத்துவிட்டால், நமது ஆதிக்கம் அழியாது, என்று சிந்தித்துப், பிரிட்டிஷாரிடமிருந்து மத சமுதாய முறையிலே தலையிடுவதில்லை என்றவாக்குறுதியைப் பெற்றுக்கொண்டதுடன் மக்களிடம்சென்று, "மருளாதீர் மகாஜனங்களே! மகாவிஷ்ணுவின் அவதாரமே, மன்னர்கள். இன்று நம்மை ஆளும் ஆங்கிலரும், விஷ்ணு அம்சமே!" என்றுஆரியர்பிரசாரம் செய்தது. கிளைவ், பிளாசியிலே துவக்கியகாரியத்தைக் குளத்தங்கரைகளிலே ஆரியர், பூர்த்திசெய்து வைத்தனர். யார்ஆண்டாலென்ன? என்பது ஆரியருக்கு இதிகாச காலத்திலேயே இலட்சியம்! இல்லாமலா பாதுகைக்குப் பட்டாபிஷேகம் நடத்தினுர்கள்!! ஆச்சாரியாரின் நடையிலே இதனை விளக்குவோம்.

பணிபாய், ஒரு நற்குணவல்லி. பணிசெய்வதிலே தேர்ந்தவள் பெயருக்கேற்றபடி. காரிருளிலேகதவில்லா இல்லத்திலே இருந்தபோது, பணிபாயைப் பரங்கியப்பன் பிடித்துக்கொண்டான். பணிபாய் பிரலாபித்தாள். பணிபாயின் பணிவிடைகளைப் பெற்றுவந்த ஸ்ரீஜத், பார்த்தார். பரங்கியப்பனிடம், பணிபாய்சிக்கிவிட்டதால், தனக்கு வழக்கமாகச் செய்துவந்த பணிவிடை கிடைக்காது போகுமே

(6-ம் பக்கம் பார்க்க.)

தொடர்கதை

பார்வதி பி. ஏ;

சேளமியன்.

கதை கற்பனையே; கதையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:-லோபி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறார். அவருக்கு வாரிசாகவர இருக்கும் பார்த்திபன் எனும் வாலிப வாய்வீரனுக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயித்திருந்தபோதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறாள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனால் 'ரட்சகன்' என்னும்பத்திரிகை நடத்தப்படுகிறது. தருக்கள் தமசருபரர், பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதம்உண்டாகும்படி வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறார். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு, நரசிம்மன் என்பவன் காதலனாகிறான். பார்த்திபன், கதர்க்கீடனம் பார்க்கக் கேரளம் செல்கிறான். உத்தமி கருவுற்றாள். நரசிம்மன், குமுதினி என்பவளைக் கலியாணம்செய்துகொண்டு, உத்தமியைக் கைவிடுகிறான், குமுதினியின் உதவியால் உத்தமி பெங்களூர் செல்கிறாள். அங்கு லேடிடாக்டர் லலிதாதன் கதையைக் கூறுகிறாள். பிறகு,....]

"ஆமாம். இப்போதுஇல்லை. இறந்துவிட்டான், என் இருதயஜோதி" என்று கூறிவிம்மினாள் டாக்டர். "அழாதே டாக்டர்!" என்றுகூறி, அவளைத்தன் அருகே உட்காரவைத்துக்கொண்டாள் உத்தமி. இருவரும், அந்தப் புகைப்படத்தைப் பார்த்தபடி, சில விநாடிகள் இருந்தனர். லேடிடாக்டர் லலிதகுமாரியின் பேச்சு சிரிப்புடன் கலந்தேஇருக்கும். அவளைக் கண்டவர் எவரும், உலகிலே கவலை என்பதே ஒருதுளியும் தெரியாதபேர்வழி, இந்த லலிதா! என்று கூறுவர், பொறாமையுங்கொள்வர். திறமையானவள். நல்ல வருவாய். பிருந்தாவனம், பெங்களூரிலேயே அழகான பங்களா. அங்குள்ள பூச்செடிகளைக்கண்டு,மற்றப்பங்களாவாசிகள் ஆச்சரியப்படுவர். அவளுடைய மோட்டார் டிரைவருக்கு, ராணுவமுறையான உடைஇருக்கும். அவள்மாலைக் காலங்களிலே, வெளியேஉலவச் சென்றால், உள்ளூர் சீமான்கள், தங்களுக்கு லேடிடாக்டர் லலிதகுமாரியைப்போல, நவநாகரிக நங்கையை மனைவியாகப் பெற்றுமகிழும் பாக்கியம் இல்லையே, என்று பெருமூச்செறிவர். அவளுடைய பேச்சே, கவலையைப்பலகாததூரம் விரட்டிவிடுவதாகத் தோன்றும், "வாங்கோ! வீட்டிலேயாவரும் சௌக்கியந்தானே! புதிதாகஇராஜபாளையம்நாய்க்குட்டி வாங்கி வந்தீர்களாமே, பார்க்க வேண்டும், சபோடா பயிர் எப்படிஇருக்கிறது, என்று லேடிடாக்டர் பேசினதும், நோயாளியை அழைத்துக்கொண்டுவரும் சீமான் புதியநோய் பிடித்தவராகிவிடுவார். இப்படி, உலகின் கண்களுக்குக் களிப்பின்உருவமாகக்காட்சியளித்துவந்த லேடிடாக்டரின், கண்ணீரைத்தான், உத்தமி, துடைக்கவேண்டியிருந்தது. "இந்தத் தங்கரூபன் இறந்துவிட்டான். இவன் தகப்பன் பைத்யக்காரச்சாலையிலே இருக்கிறான். நான் இங்கே, மற்றவர்களுக்கு மருந்துதருகிறேன். என் மனநோய்க்கு மருந்தேகிடைக்க முடியாது' என்று லேடிடாக்டர் துவக்கித்தன் துயருள்ள கதையைக் கூறலானாள்.

"உத்தமி! என்கதைசோகம் நிரம்பியது, ஆனால் விசித்திரமானது. என் தகப்பனார், பெரிய நாகரிகபுருஷர், சீமையிலே படித்துப்பட்டம்பெற்ற பெரிய டாக்டர். சென்னையிலே ஆறுமாதம், உதகமண்டலத்திலே, ஆறு மாதம், இருப்பார். மூன்று வருடத்திற்கொருமுறை சீமைக்குப் போய்வருவார். நான் பதினாறும் வயதிலேயே பத்தாவது வகுப்பிலே, ஆசிரியர் புகழும்படியான அளவுதிறமைபெற்றுத் தேறினேன் உத்தமி! நான் அழகுள்ளவள்தான் என்பது, கவலையால் கப்பிக்கொள்ளப்பட்டுள்ள இந்த நிலைமையிலும் தெரியும். அப்போது இருந்தஅழகு, இளமையாலும், இன்ப வாழ்க்கையாலும், செல்வத்தாலும், அதிக சோபிதமாகஇருந்தது. காலேஜில் சேர்ந்தேன், அதேபோது, காதல்வேட்டையாடும்கயவர் உலகிலும்புகுந்தேன். என் அழகைப் பூஜித்தவர் பலர், ஆனால் நெருங்கி நின்று, பூஜை புரிந்தவர் மூவர். அவர்களில் ஒருவர் ஆசிரியர், மற்றொருவர், என்னுடன்படிப்பவர், மூன்றாமவர் தான் தங்கரூபனின் தகப்பனார், அவர் யார் தெரியுமோ? காலேஜ் தோட்டக்காரனின் மகன்!!

நவநாகரிகமும் அதைநன்கு சுவைத்திடச்செல்வமும் என்குடும்பத்திலே இருந்ததால், என்கல்லூரிவாழ்வு, இன்பமயமாகவே இருந்தது. ஆண்டிற்கு ஒருமுறைதானே, படிப்பின்போக்கு எப்படி இருக்கிறது என்று தெரியும். அன்றாடம், தெரிந்துவந்தது வேறு! புதியப்புதிய அலங்கார முறைகள், ஆடைவகைகள், புன்சிரிப்பிலே பலரகம், குழைவானபேச்சு, கடுகடுப்பு கவலை, முதலிய பலரசவிளக்கம், என்றஇவ்வகைளை, நான், ஆசிரியர்களிடம்ஓரளவும்,மாணவிமாணவத்தோழர்களிடம் பெரும்பகுதியும் கற்றுக்கொண்டேன். ஆண்களின் நாற்றமேஎனக்குப் பிடிக்காது என்று மேலுக்குப்பேசிவிட்டு, உள்ளுக்குள்ஏக்கம்கொண்டுவாழும் தோழிகளென்ன, எவனாவதுஎன்னை ஒருவிதமாகப்பார்த்தால், நான் ஒரு முறை முறைத்துப்பார்ப்பேன், அவன் எப்படிப்பட்ட புலியாகஇருப்பினும் நடுங்கியே போவான், என்று வெளிக்கு வீரமாகப் பேசிவிட்டு, உள்ளூறத்தினுடன் உலவும் தோழிகளென்ன, தங்களிடம் ஷெல்லி இருப்பதாகச் சந்திரசேகர் கூறினார், நேற்றுமாலை டென்னிஸ் கோர்ட்டிலே என்று மாணவனைக்கேட்டு, அவன் கூச்சத்தால் குளறிக்கொண்டே, ஷெல்லிபுத்தகத்தைத்தராமல் ஷேக்ஸ்பியர் புத்தகத்தைத்தரக்கண்டு சிரித்துவிட்டு, பிரதர்! நான் கேட்டது ஷெல்லி என்று கவனமூட்டும் சிங்காரிகளென்ன, அடி, மேரி! ஏண்டி, ஹிஸ்டரி புரபசர், அடிக்கடி ராஜாக்களின் கலியாணவிஷயத்தைப் பற்றியே விளக்கிவிளக்கிப் பேசுகிறார், என்று ஒருவள் கேட்க, இது தெரியவில்லையா, அவர்ஒருஜாலிபூல் (Jolly Fool) என்று பதில்கூறிச் சிரிப்பூட்டும் நகைச்சுவை நளினிகளென்ன, தலைகுனியாமல் முகத்தைச்சற்றுத்தூக்கியபடியும், இதழ்களைப்பிரிக்காமல் இறுகமூடியபடியும் நடந்து அதுதான் கெம்பீரத்தின் அறிகுறி என்று மனப்பால் குடிக்கும் மாணவியும், அதோபாரடி போரிஸ் கார்லாப் (Boris Karloff) வருகிறான், என்று சினிமா நடிகனின் பிசாசு உருவத்துடன் அந்தப் பெண்ணை ஒப்பிட்டுக் கேலிசெய்யும் கிண்டல்காரிகளென்ன, மோட்டாரிலே போகும்போதும்,விளையாட்டுமைதானத்திலே உட்கார்ந்திருக்கும் போதும், புத்தகத்தைப் பிரித்துவைத்துக் கண்களை அதிலே பதியச்செய்துகருத்தை எங்கெங்கோ விதைக்கும் கன்னிகளென்ன, சிகப்புச்சாயம் பூசாவிட்டால், அதரத்தின் அழகுகெடும் என்று கருதும் அலங்காரிகளென்ன, அழகுக்குஅழகுயார் செய்வது என்று கருதிக்கொண்டு, தைலமில்லாக் கூந்தலுடன், தளர்நடை நடந்துகாட்டும் தையலர்களென்ன, முன்னாள் இரவுகண்ட சினிமாவை முழுதும் வர்ணிக்கும் மாணவிகளென்ன, காதற்கதை தீட்டுவதிலே எந்த நூலாசிரியர் சிறந்தவர் என்று விவாதிக்கும் வனிதையர்களென்ன, சினிமா நட்சத்திரங்களின், மேக்கப்

(6-ம் பக்கம் பார்க்க.)

பார்வதி பி, ஏ;

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

விசேஷத்தை விளக்கும் சித்ராங்கிகளென்ன, மாணவனைக்கண்டதும், வேடனைக்கண்டமான் மிரளுவதைப் போல மருண்டிடும் பாசாங்குக்காரிகளென்ன, கூட்டமாக வழியிலே பல மாணவர்கள் நின்று சிரித்துப்பேசிக் கொண்டிருக்கையிலே, கோலாகலமாக அவ்வழியே சென்று, விழியால் வழிகேட்டு நடக்கும் விசித்திரவதிகளென்ன, என் கல்லூரித் தோழிகளின் ரகம் இவ்வளவு என்றுகூற முடியாது. அதுமாத்திரமா வேடிக்கை! அவர்களின் நடைநொடிபாவனைகளிலே திடீர் திடீரென உண்டாகும் மாற்றங்களோ, அதைவிடப்பலரகம்! ஒருமாதம் விசேஷ அலங்காரவதியாக இருப்பாள் ஒரு மாணவி, திடீரென, மிகச்சாதாரணமாக உடுத்திக்கொள்ளத் தொடங்குவாள். மாற்றத்துக்காரணம் இராது. (Simple ஆக) எளியமுறையிலே தான், வாழவேண்டும் என்றுரைப்பாள். தாண்டவமாடும் லோலக்கும், தரையிலே புரளும் ஜார்ஜட்டும், விவெட்டுள்ள ஜாக்கட்டும், விதவிதமான கண்ணாடி வளையல்களும், திலகமும் பிறவும், திடீர்திடீரென்று ஒருவளைவிட்டு ஒருவளை ஆட்கொள்ளும்! காரணம் இராது. இவையத்தனையையும் விட, என் தோழிகளின் எண்ணங்களின், இடமாற்றம் இயல்பு மாற்றம் என்பவைகளை விவரிப்பதானால் பலவருஷம் பேசலாம், அவ்வளவு உண்டு. மனோகரன் நல்லவன் என்று கூறிய கோமளமே, மறுதினமே ஹி இஸ் அன் இடியட் (He Is An Idiot) (அவன் ஒரு முண்டம்) என்று கூறுவாள்; கல்லூரி மாடியிலிருந்து இறங்கும்போது, அவனுடைய தோள்தெரிந்தோ தெரியாமலோ, கோமளத்தின் மீது பட்டதன்றி வேறுகாரணம் கூறமாட்டாள் கோமளம். இவைகளெல்லாம் போகட்டும் என்றால், வேறோர் முக்கியமான, ஆபத்தைத்தரக்கூடிய சுழல், கல்லூரியிலே இருக்கிறது. நான் அதிலே சிக்கினவள்! சுழலும் கண்களும், சுருதிகலையாத குரல்களும், சுந்தரஉருவங்களும், கல்லூரிக்கு வெளியேயும் உண்டு. ஆனால் நான் கூறும் சுழல் வேறு. வதந்தி! ஆமாம், மீனுவுக்கும் வேம்புவுக்கும் காதல், என்றுகூறுவாள் ஒருத்தி, பங்கஜாவுக்கும் பக்கிரிக்கும் இருப்பதுபோல என்று இரண்டாவது வதந்தியைப் பரிசளிப்பாள் மற்றொரு மாணவி. இருவரையும்விட அதிகதைரியமுள்ளவள், சரோஜாவுக்கு எப்போதும் பஸ்ட் மார்க் (First Mark) கிடைக்கிறதன் காரணத்தைச் சொல்லுங்கோ பார்ப்போம், என்று கேட்டுவிட்டுப் பிறர் பதில் கூறுவதற்குள், புரபசர் பாஸ்கரனுக்கும் சரோஜாவுக்கும்.........என்று, முடிக்கப்படவேண்டிய அவசியமில்லாத முறையிலே பேசுவாள். அவளுடைய துப்பறியும்திறனை வியப்பதுபோல, அந்த மாணவிகள் சிரிப்பர். வதந்திகள், விநாடிக்கு விநாடி வேகவேகமாகக் கிளம்பும், கல்லூரியைச்சுற்றிச்சுற்றித் திரியும். நான் அவ்விதமான சுழலிலே சிக்கிக் கொள்வேன் என்று உணரமுடியாது போயிற்று. புரபசர் பாஸ்கரன், பெற்றதெல்லாம், என் புன்சிரிப்பு ஒன்றுதான், அதுவும், நான், மனதிலே கல்மிஷமின்றி, ஆசிரியருக்குச் செய்யவேண்டிய மரியாதை என்று அளித்ததே! அது, என் தோழிகளுக்கு ஒரு மாலை, விவாதத்திற்குரிய விஷயமாகிவிட்டது. "ஆசிரியராகஇருந்தாலும் மாணவராகஇருந்தாலும், பெண்கள் புன்சிரிப்புசெய்தால், அவர்களை அந்தச்செயல், விருந்துக்கு அழைப்பதுபோலத்தான்!" என்று தீர்மானமாகத் திலகாகூறினாள்.

[தொடரும்.]

மதிவிலக்குச்சட்ட ரத்து!

(4-ம்பக்கத்தொடர்ச்சி.)

என்று பயந்தார். ஸ்ரீஜத், பரங்கியப்பனிடம் கூறினார், "பரங்கியப்பா! பணிபாயோ உன்னிடம் இருக்கிறாள். எனக்குப் பணிவிடை செய்வதே அவள் வழக்கம். எனக்குப் பணிவிடை செய்யமட்டும் அவளுக்குச் சுதந்திரம் கொடு" என்று. பரங்கியப்பன், சரி, என்றான். வழக்கப்படி, பணிபாய், ஸ்ரீஜத்துக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டு, பரங்கியப்பனின் படுக்கையறைக்கும் பயன் படுகிறாள். இதுகதை—கருத்தை விளக்க.

படுக்கையறைக்குப்பயன் படுகிறாள், என்பதன் சுருக்கம், விபசாரம்! ஒருநாடு மற்றோர் நாட்டை ஆள்வது, அரசியல் விபசாரித்தனம் என்று அறிஞர் புகல்வர். பணிபாய், என்பதை இந்தியாவுக்குப் பெயராகக்கொண்டு, பரங்கியப்பன் என்பதைப்பிரிட்டிஷாருக்குக்குறிப்புப் பெயராகக்கொண்டு, ஸ்ரீஜத் என்பதை ஆரியத்துக்குக் குறிப்பாகக்கொண்டு, கதையைக்கருத்துரைக்கச் செய்யுங்கள்!! ஆரியம் அழியாதிருக்க ஆங்கிலரிடம் வரம் பெற்றது. அடிக்கடி ஏதேனும் ஆரியச் சலசலப்பு கேட்டால், அதன்காரணம், ஆங்கில ஆட்சி, ஆரியத்துக்குக்கொடுத்த வாக்குறுதியை மறந்ததோ என்றமருட்சியாகவே இருப்பதையும், கூர்ந்து நோக்கினால் தெரிந்துகொள்ளலாம். ஆங்கிலரிடம் ஆரியம் இந்த வாக்குறுதி பெற்றதனால்தான், ஆட்சியாளராக ஆங்கிலர் இருந்துங்கூட, ஆற்றோரத்திலே உலவி ஆரியர் வகுத்தவர்ணாஸ்ரமம், இன்னமும் வாழ்கிறது, மக்களின் மனவளமும் பொருள் வளமும் நிலவளமும் கெடுகிறது, இது தெரிந்தும் ஆட்சிபுரியும் ஆங்கிலர் நாங்கள் என்ன செய்யமுடியும்! என்று கூறுகின்றனர். ஆரியதாசராகப் பிறந்து உழைத்து, பலகோடி மக்கள் மாள்கின்றனர்.

ஆரியதிட்டத்தின்படியுள்ளவரிவசூல்முறைஅதாவது தானம் என்றபெயரிலேஉள்ளதை அறிந்தால், கொடுங்கோலர்களும் பொறாமை கொள்வர்! மனுநீதி மன்னனின் சட்டமென்றாலும், ஒரு மனிதனின் சட்டந்தானே, வேறுமனிதனுக்கு அதைமாற்ற அதிகாரமுண்டு, அறிவும் பிறக்கும். ஆனால்,தானதிவ்ஷயமாகவும்சமுதாய மதவிஷயமாகவும்ஆரியசட்டதிட்டம், ஆண்டவனாலேயே செய்யப்பட்டதாம்! பிறகு அதையார் மாற்றமுடியும்? ஆகவேதான் சேரியும் அக்ராகாரமும் அயோத்திராமன் காலத்திலிருந்து அமெரிதுரை காலம்வரையிலே இருக்கிறது! தானங்கள், சனகசனந்தனாதியோர் காலமுதற்கொண்டு, சர்ச்சில்துரை காலம் வரையிலே இருக்கிறது. ஆட்சிபுரிபவனுக்குக் கொடுக்கும்வரி, ஊர்பாதுகாப்பு, விளக்கு, ரோடு, வைத்தியம் வழிவசதி முதலியன மட்டுமேதரும்! ஆரியருக்குத் தரும் தானமோ, ஆண்டவனின் அருளை வாங்கித்தருமாம்!

ஆபாசமான, அறிவுக்குப் பொருந்தாதனவற்றைஆண்டவன்சொன்னார் என்றுகூறி, எய்க்கும் கூட்டத்தார், ஆங்கிலரிடம், மதசமுதாய இயலிலே தலையிடுவதில்லை என்றவாக்குறுதி பெற்றது போலவே, நாட்டுவிடுதலைக்காகத் தோற்றுவிக்கப்பட்ட காங்கிரசிடம் வாக்குறுதி பெற்றுள்ளனர். கராச்சித்திட்டம் என்பதுதான் அந்தவாக்குறுதி. ராமராஜ்யம் என்று காந்தியார் கூறுவது, இந்த வாக்குறுதியைக் கொண்டுதான். பழங்காலத்திலே, ஆரியர் மதிவிலக்குச் சட்டம் செய்தனர், அதன் அமுல்இன்றும் இருக்கிறது. இன்று ஆரிய ஆச்சாரியார் செய்த மதுவிலக்குச் சட்டத்தை ரத்துசெய்ய அவசரமும் அவசியமும் தோன்றிய, அரசாங்கத்தாருக்கு, ஒரு பெரிய இனம் பாழ்படும்படியாக, ஆரிய ஆட்சியாளர் முன்பு செய்துவிட்ட மதிவிலக்குச் சட்டத்தை ரத்துசெய்ய வேண்டியதன் அவசியம் தெரியவில்லை! என்? மதுவிலக்குச்சட்டத்தை ரத்து செய்ததற்காக ஒருபத்துநாட்கள் பதைத்ததோடு ஆச்சாரியார் அடங்கிவிட்டார், ஆனால் தமது முன்னோர்கள் இயற்றினார்களே மதிவிலக்குச் சட்டம் அதைப்பிரிட்டிஷார், ரத்துசெய்தால், சும்மாவிடமாட்டார், என்று பிரிட்டிஷார் கருதுகின்றனர் போலும்! மதிவிலக்குச்சட்டத்தைரத்துசெய்யும் கிளர்ச்சியே, பெரியார் செய்துவருவது. மதிவேண்டுவோர் எவரும், அந்தமதியைவிலக்குச்செய்த வேதியச்சதியை, வேதகால ஏற்பாட்டை ரத்து செய்யப் பணிபுரிய வேண்டும். எங்கே அந்த அணிவகுப்பு!

நே—9. தோழர் கலியாண சுந்தரனுக்குக்

கைவல்யம் கடிதம்.

பத்து வருடத்திற்குமுன், பெரியாருக்கு ஸ்ரீசங்கராச்சாரியார் எழுதிய அழைப்பைக் கீழே எழுதுகிறேன்.

ஸ்ரீஜகத்குரு சங்கராச்சாரி சமஸ்தானம் ஸ்ரீஜசிருங்கேரி க. நெ. 53

(முகாம் புஷ்பவனம்)

அஸ்மத் பிரியமுக்கிய சிஷ்யரான் கோயமுத்தூர் ஜில்லா ஈரோடு வெங்கிடசாமி நாயுடு குமாரர் ஸ்ரீமான் இராமசாமி நாயுடுவினுடைய சமஸ்த ஐஸ்வரிய ஆரோக்கிய அபிவிருத்தியின் பொருட்டுத் திரிகால அனுஷ்டானத்திலும் பகவத் பிரார்த்தனையுடன் ஆசீர்வதித்து எழுதி வைத்தனுப்பிய ஸ்ரீமுகம். இங்கே ஆற்காடென்னும் க்ஷேத்திரங்களில் ஒன்றாகிய புஸ்பவனம்என்னும் புதுப்பட்டிக்கிராமத்திய ஸ்ரீபாரத்துவாஜ மகாரிஷி ஆசிரமத்தில் லோகத்தில் எல்லாருடைய க்ஷேமத்தைக்குறித்துத் தபஸ்செய்து கொண்டு இந்த மரியாதையை அனுப்பி யிருக்கிறோம்.

காலதேசவர்த்தமானத்தை அனுசரித்துச் சாத்தியமானவரையில் சிஷியர்களைச் சன்மார்க்கத்திலும் சதாச்சாரத்திலும் நடத்திச் சந்தோஷமாக விருக்கச் செய்து கொண்டுவருகிறது, இன்னும் காலதேசவர்த்தமானத்தை யோசித்து சாஸ்திரங்கள் இடம் கொடுத்திருக்கும் வரையிலும் தற்கால நிலைமையை அனுசரித்துச்சிஷியர்களுக்குச்சிலசுதந்திரங்களையும் இந்த ஜகத்குரு சமஸ்தானம் கொடுக்க வேண்டியது அவசியமாகத் தோன்றி யிருக்கிறது.

நீங்கள் நெடுநாளாய்ப் பாரபட்சமின்றியும் தாட்சணியங்களுக்கு உட்படாமலும் ஜீவகாருணிய முள்ளவராயும் சுய நன்மையைக் கருதாமல் லோகநன்மையையே முக்கியமாகக்கருதிச் சுகதுக்கங்களைப்பாராமல் மானாபிமானங்களைக்கவனியாமல்ஜன்மமெடுத்ததற்குப்பரோபகாரமே சாதனமென்று கருதி உங்கள் தருமபத்னிசமேதராய்ப்பாடுபட்டுவருவது எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தை உண்டாக்கியிருக்கிறது. உங்களை நேரில் பார்த்து உற்சாகப்படுத்தி எங்கள் அபிப்பிராயத்தையும் உங்களுக்குச் சொல்லித் தக்கசகாயமும் செய்து அனுக்கிரகிக்க வேண்டுமென்று குருதேவதாப்பிரார்த்தனை அண்டியிருப்பதால் விவேகியாகிய நீரும் உங்கள் தருமபத்தினியும் அனுதியாய் உங்களுக்குச் சொந்தபாத்தியமான இந்தஜகத்குரு பீடத்தைச்சிறப்புவிப்பதற்காக இந்த சமஸ்தானத்திற்கு ஸ்ரீ சாரதா சந்திர மௌளீதரஸ்வாமிகள் அனுக்கிரகம் பெற்று இப்போதிலும் அதிகமான சிரேசை அடைவீர்களென்று நம்பி இந்த ஸ்ரீமுகம் எழுதிவைத்துஅனுப்பலாயிற்று. விவேகிகளுக்கு என்னஎழுத வேண்டியிருக்கிறது.

கையொப்பம்,

ஸ்ரீ. பிரஸ்தாவித்தியாநந்த பாரதஸ்வாமி சங்கராச்சாருஃ

பு. அ. வெங்கிட்டரமணம், சர்வாதிகாரி. மடத்துமுத்திரையும் போடப்பட்டிருக்கிறது.

இது, 2–3–1930 வருடம் குடிஅரசில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமுகத்திலுள்ள வாசகங்களைப் படித்துப்பாருங்கள். எங்கள் கலைப்படிப்பும், வளர்ச்சியும் எவ்வளவுதூரம் போயிருக்கிறதென்பதை ஆலோசியுங்கள்.

சங்கரர் மடத்தில், மடத்துச் சாஸ்திரிகள், வந்து வந்துபோகும் சாஸ்திரிகள், பல ஊர்களிலிருந்து வந்து அவர்கள்கூட ஊர்ஊராய்ப்போகும் சாஸ்திரிகள், முகாம்போட்டிருக்கும் ஊர் சாஸ்திரிகள், லௌகீகப்பேர்க்கு, அந்தந்த ஊரின் விவகாரப்போக்கு இத்தனையும் தெரிந்த சர்வாதிகாரி, இவற்றுக்குக் கீழ்ப்பட்ட காரியஸ்தர்கள், படித்த பார்ப்பாரக்கூட்டம், பெரியார் எனக்கேட்டதும் கோபித்து நிந்தித்துப்பேசும் பார்ப்பார் கூட்டம், கைகட்டிவாய்பொத்திக்காணிக்கை கொடுக்கும் பண்க்காரர்கூட்டம், இவர்களுக்குத்துணையாகப் பக்தகூட்டம், இத்தனையும் சூழ்ந்து நிற்கும் சங்கரர் பீடத்திலிருந்து, ஆலோசித்துத்தர்க்கித்து முடிவுகட்டினபின்தானே பெரியாரை அழைக்க ஸ்ரீமுகம் அனுப்பிஇருக்க வேண்டும். தங்களுக்குப் பட்டதுபோலப் பெரியாருக்குப்படிப்பில்லை,அவர்கூட்டத்தாருக்குக்கலைஉணர்ச்சியில்லை என்றுசிறு கூட்டத்தாருக்குப் பட்டிருந்தால் அழைத்திருப்பார்களா? பெரியார்நன்னூலை நடைதமும் பாடங் கேட்டுக்கொள்ளாவிட்டாலும், அறிவதும் தெரிவதுதானே படிப்பு. அறிவினால்உயர்ந்தவர் பெரியார். இவர் சங்கமோ, வேதஸ்மிருதி சாஸ்திரப் போக்குகளும் தெரிந்திருக்கிறது. நமது சமய சட்டதிட்டங்களின் அமைப்பையும் தெரிகிறார்கள் என்பவைகளைச் சங்கரர் மடம்தெரிந்துதானே ஸ்ரீமுகம் அனுப்பியிருக்கவேண்டும். எங்களுக்குக் கலைப்படிப்பு இல்லாதிருந்தால் ஸ்ரீமுகத்தை நாங்கள் எப்படிப் பார்க்க முடியும்?

ஜனனமெடுத்தற்குப் பரோபகாரமே சாதனமென்றும் உங்கள் தருமபத்தினி சமேதராய்ப் பாடுபடுவது எங்களுக்குமிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. உங்களை நேரில் பார்த்து உற்சாகப்படுத்தி எங்கள் அபிப்பிராயத்தையும் உங்களுக்கு நேரில் சொல்லிச் சகாயம்செய்து அனுக்கிரகிக்க வேண்டுமென்று குருதேவாப்பிரார்த்தனை உண்டாயிருப்பதால் மடத்திற்கு வந்து ஸ்ரீ சாரதாசந்திர மௌளீதர ஸ்வாமிகள் அனுக்கிரகம்பெற்று இப்போதிலும் அதிகமான சிரேசை அடைவீர்கள் என்று ஸ்ரீமுகத்திலிருக்கிறது.

ஆத்மக்கலைவளர்ச்சியில் சங்கரர்மடம் உயர்ந்தது. அனுக்கிரகம்செய்யுமிடத்தில் இன்னுமிருப்பதால் எங்களுக்கு அனுக்கிரகம்செய்யவும் உதவிசெய்யவும் ஆலோசித்து இரண்டுமொத்த சீர்திருத்தம் செய்யவும் பெரியாரைக் கூப்பிட்டது இரண்டின் ஆத்மக்கலையுணர்ச்சி ஒன்றுக்கேகாட்டுகிறது. இன்று ஒன்றாய்க்கலக்காவிட்டாலும் காலசக்தியால் ஒன்றுபட்டேயாகவேண்டிவரும். இதற்கிடையில் தங்களிடம் ஏதோஒரு ஆத்மகலைவளர்ச்சியிருக்கிறதென்கிறீர்களே அதைச் சொல்லிவிடுங்கள்.

திருநெல்வேலி சைவசபையும் கலைப் படிப்பில் உயர்ந்தவர்களென்று பெயர் வாங்கினபண்டிதர்களும் எங்கள்பக்கமே தீர்ப்புக்கூறிவிட்டார்கள். ஸ்ரீசங்கரர் அழைப்பும் எங்கள்சார்பிலேயிருக்கிறது, இவைகளை நீங்கள் கண்ணால் கண்டது கேட்டதல்ல. இப்படியெல்லாமிருக்க எங்களுக்கு மாறுபட்டவர்கள் முன்னால் எங்களுக்குக் கலைப்படிப்பில்லை என்கிறீர்களே; எதனால் சொல்லுகிறீர்கள்? அதனால் உங்களுக்கு வந்தபாக்கியம் தானென்ன? தாயைக்கொன்றவனுக்கு ஊரில் பாதியென்கிற பழம்சொல்லிருந்தாலும் தாயைக்கொன்ற பழிபோகுமா? உங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், உங்களுக்குத் தேவையானதை சம்பாதித்துக் கொள்ளவும் உங்களுக்கு இஷ்டமானதைச் செய்யுங்கள். எங்கள் எதிரிடம் எங்களைப் படிப்பில்லாதவர்களென்று ஏன் சொல்லுகிறீர்கள்? எந்தக்கலையை நாங்கள் படிக்கவில்லை? அதையாவது சொல்லுங்கள். நீங்கள் தெரிந்ததும் தெரியாததுமான எத்தனையோ கலைகளை எழுதினோம். அவைகள் நியாயத்திற்கு ஒத்ததாக இல்லாவிட்டால் அதைச்சொல்லுங்கள். எதையோசொல்லுங்கள்.நாங்கள்ஆராய்ச்சிப்பண்டிதர்களுடன் [illegible] சந்தேகத்தையாவது தீர்த்துவையுங்கள்.

சிவபெருமான் தென்கோட்டைச்சமப்படுத்த அகஸ்தியரை அனுப்பினார். அவரும் வந்திருந்து தென்கோட்டையும் வடகோட்டையும் சமப்படுத்தினரே. பின் 108-1008 சிவலிங்கத்திற்குள்ளும் இன்னும் பல சிவலிங்கத்திற்குள்ளும் வந்து சிவபெருமான் எழுந்தருளி யிருக்கிறாரே. வடகோடு என்னவாயிற்று? தென்கோடு அகஸ்தியரையும் சிலவேளை தாங்கினால் என்ன பாடுபடும்? வடகோட்டுக்குயாரை வைத்துவந்தார்? யாரை அனுப்பினர். மற்றுமுள்ளதைப் பின்னால் தெரிந்து கொள்கிறோம். இங்ஙனம்,

கைவல்யம்.

பேகம் ஷா நவாஸ்.

2-ம் பக்கத்தொடர்ச்சி.

சிறந்த அறிவும்படைத்த ஸ்ரீமதி ஜஹானராவின் அபிப்பிராயப்படி மியான்ஷா நவாஸ் அவர்களும் ஒழுகிவந்தார். மலரும் மணமும்போல் இவர்களது இனிய வாழ்க்கை இன்பமாக நடைபெற்று வந்தது.

நாட்கள் பலசென்றன. ஸ்ரீமதி ஜஹானராவுக்கு ஓர் புத்துணர்ச்சி யேற்படவே தமது சமூகப்பெண்கள் முன்னேற்றத்தைப்பற்றி அக்கரை எடுத்துக்கொண்டார். 1917-வது ஆண்டுமுதல், ஸ்ரீமதி ஜஹானரா உலகவிஷயங்களிலும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்; மூடப் பழக்க வழக்கங்களிலும், குருட்டு நம்பிக்கைகளிலும் தமது சகோதரிகள் சிக்குண்டிருப்பதைக் குறித்து அதிக கவனம் செலுத்திவந்தார்; கால, தேசவர்த்தமானத்திற்குத்தக்கபடி மாதர்கள் மாறுதலடைய வேண்டுமென்பது அவரது உள்ளக்கிடக்கை.

பர்தாவுக்குள்ளிருந்து, தமதுகோரிக்கைகளையும், எண்ணங்களையும் நிறைவேற்ற முடியாது என்றுணர்ந்த ஸ்ரீமதி ஜஹானரா அவர்கள் வைதீகர்களின் பலத்த எதிர்ப்பு இருந்தும் அவைகளொன்றையும் பொருட்படுத்தாமல்தைரியமாக முன்வந்து, தேசசமூக நலன்களுக்குத் தீவிரமாக உழைத்துவரலானார்.

1929-வது ஆண்டில் நடைபெற்ற சீர்திருத்த மகாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி இவரேயாவார்.

முதலாவது வட்டமேஜை மகாநாட்டிற்கு ஜனாப் சர். முஹம்மத் ஷபீ அவர்கள் இங்கிலாந்துசென்றபொழுது ஸ்ரீமதி ஜஹானராதான் தமது தந்தையின்காரியதரிசியாக இருந்துவந்தார். ஓர் ஆண்மகன் செய்துவரக்கூடிய எல்லாப்பணிகளையும் காரியதரிசி என்ற ஒதாவில் மிகத் திறமையாக ஸ்ரீமதி ஜஹானரா செய்து வந்தார். 1931-வது ஆண்டில் லண்டன் வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்ற மூன்று ஸ்திரீ பிரதிநிதிகளில் ஜஹானராவும் ஒருவராவார். 1933ல், அகிலஇந்திய பெண்கள் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1934—வது ஆண்டில் ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியில், இந்தியா டெலிகேஷனில் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்துணை ராஜ்ய விஷயங்களில் கலந்துகொண்டபோதிலும், தமது சகோதரிகளின் அறியாமைக்கும், பரிதாபகரமான நிலைமைக்கும் பரிகாரம் தேடாமல் இருந்ததில்லை.

"எனக்குச் சரியான கல்வியில்லாமல் இருந்தால், யானும் இயற்கை எழிலையும், செயற்கை அழகையும் கண்டு களிக்காமல் வீட்டினுள் அடைபட்டல்லவா இருக்க வேண்டும்" என்று பேகம்ஷாநவாஸ் எப்பொழுதும் சிந்தனை செய்வதுண்டு.

பெண்கள் முன்னேற்றத்திற்காக இவ்வம்மையார் செய்திருக்கும் தொண்டு அளவிடற்கரியதாகும். 1931-வது ஆண்டிலிருந்து பேகம் ஷாநவாஸ் டில்லி, தேசியப்போர் முன்னணிப் பெண்கள் பிரிவு தலைவியாக இருந்து யுத்தசேவை புரிந்து வருகிறார். அண்மையில் இங்கிலாந்து, அமெரிக்கா முதலியநாடுகளுக்குச்சென்று இந்தியாவின் யுத்தஇலக்ஷியத்தை நன்கு விளக்கிவந்துள்ளார். சின்னாட்களுக்குமுன்பு இவ்வம்மையார் தமிழ் நாடு பூராவும் சுற்றுப்பயணம் செய்து சொன்மாரி பொழிந்தார். 14–12–43ல் இவ்வம்மையாரின் சொற்பொழிவைச் செவிமடுக்கக்கூடிய சந்தர்ப்பம் எமக்கு கோவையில்கிட்டியது. அந்தச் சந்தர்ப்பந்தான் இந்தக் கட்டுரைஎழுத என்னைத் தூண்டியது.

A. M. யூசப்மரைக்காயர்.

வரவேற்கிறோம்.

வடாற்காடு ஜில்லாபோர்டைத்திருத்தி அமைத்த சர்க்கார் பிரகடனத்தில் வெளியாயுள்ள நமது இயக்கத் தோழர்களின் பெயர்களைக்கண்டு மகிழ்வெய்துகிறோம்.

இதற்குமுன்னிருந்த காங்கிரஸ் நிர்வாகிகள் செய்திருந்த குறைபாடுகளை நிவர்த்திசெய்தும், திராவிட மக்கள் எதிர்பார்க்கும் சீர்திருத்தங்களைச்செய்தும், தலைவர் உபதலைவர் தேர்தல்களில் போட்டியின்றித் தேர்ந்தெடுத்துக்காங்கிரஸ்காரர்களின் பொறுப்பற்ற செயல்களுக்குஓர் நல்லபாடம்கற்பிக்கமுன்வர வேண்டும் என்று போனார். தோழர் K. சுப்ரமண்யன் எழுதுகிறார்.

ஜின்னா பிறந்ததினவிழா.

திருப்பூர் டிச. 26.

முஸ்லீம்லீக்கின் ஒப்பற்றதலைவர் மகம்மதலி ஜின்னா அவர்களின் 68-வது பிறந்ததினவிழாவைக்கொண்டாட திருப்பூர் நொய்யலாற்றங்கரையில் திரு. S. R. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. முஸ்லீம்லீக் நிலையத்திலிருந்து தொண்டர்கள் அணிவகுப்புடன் ஒருபெரிய ஊர்வலத்திற்குபின் மாலை கூட்டம் 7மணிக்கு தொடங்கிற்று. கூட்டத்தில் ஜின்னாவின் சேவையைப்பாராட்டித் தேவநகர் தஸ்தகீர்சாயபு,மதுரை A. பாக்ஷாஜான் சாயபு B. A; அவர்கள் கோவை யூசுப்மரைக்காயர் ஆகியோர் பேசினர். கூட்டம் இரவு 10-மணிக்குக் காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் முடிவுற்றது.

பவுன்நிறமுள்ள

கிளி மார்க் பட்டணம் பொடி

தென்இந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாடை கமழும்
எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்!
ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்.

நீ-1. பவுன்கலர் வீசை 1க்கு	ரு. 8—8—0.	நீ-1. கருப்புநிறம் வீசை1க்கு	ரு. 8—0—0.
நீ-2. பவுன்கலர் ,,	ரு. 7—0—0.	நீ-2. கருப்புநிறம் ,,	ரு. 6–12—0.

ஏஜண்டுஇல்லாஊர்களில் ஏஜண்டு தேவை.

எ. எஸ். ராஜன் கம்பெனி,

9-வெங்கடாசல நாய்க்கன்தெரு, பழய வண்ணாரப்பேட்டை, சென்னை.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street. L. Conjeeveram.